பேரா. கலையரசன் கைது: பாசிசத்தின் தமிழக முகம் த.வெ.க. அரசு!

பேராசிரியர் கலையரசன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதை தி.மு.க. தலைவர் கடுமையாகக் கண்டித்துள்ளார். பாசிசம் தலை விரித்தாடும்போது அதன் முதல் இலக்கு எதிர்க்கட்சிகள்; இரண்டாம் இலக்கு கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், ஊடக வியலாளர்கள்; மூன்றாம் இலக்கு மக்களின் அடிப்படை உரிமைகள். இந்த மூன்றின் மீதான தாக்குதல் களையும் த.வெ.க. அரசு இடையறாது மேற்கொண்டு வருகிறது.

எந்த அடிப்படை உரிமைகள் அல்லது சட்டங்கள் குறித்தும் கவலையில்லாமல் தி.மு.க.வினர் மீது மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகளில், ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்திடம் குட்டு வாங்கினாலும், அதைத் துடைத்துப்போட்டுவிட்டு அதே செயலைக் காவல் துறை மீண்டும் மீண்டும் செய்து வருகிறது. அரசியல் எதிரிகளின் மீதான அராஜகம், இப்போது கல்வியாளர்கள் மீதும் விரிவடையத் தொடங்கியுள்ளது. அதற்குப் பேராசிரியர் கலையரசன் மீதான காவல் துறையின் துன்புறுத்தலே சிறந்த சான்றாகும்.

ஏ. கலையரசன் ஒரு பொருளாதார நிபுணர்; கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம் வெளியிட்ட 'தி திராவிடியன் மாடல்' நூலின் ஆசிரியர். அவர் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பொறுப்புகளை வகித்துள்ளார்; மேலும் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொதுக் கொள்கைகள் குறித்துத் தொடர்ச்சியாக எழுதிவருகிறார். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (MIDS) பொருளாதாரத் துறையின் இணைப் பேராசிரியராகப் பணியாற்றிவரும் அவர், மிக முக்கியமான திராவிட ஆய்வாளரும் ஆவார்.

இவ்வளவு மதிப்புமிக்க ஒருவரைக் காவல்துறை ஒரு பொய்க் குற்றச்சாட்டில் எவ்வாறு நடத்தியிருக்கிறது என்பது அதிர்ச்சியளிப்பது மட்டுமன்றி, பாசிசத்தின் கரங்கள் எவ்வாறு நீள்கின்றன என்பதையும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. காவல் துறை தலைமை இயக்குநரிடம் (டி.ஜி.பி.) தனக்கு நேர்ந்த கொடுமைகளைக் குறித்து அவர் பின்வருமாறு விவரிக்கிறார்:

"இன்று அதிகாலை (அக்டோபர் 28) சுமார் 5 மணியளவில், நான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, சீருடை அணியாத மூன்று காவலர்கள் அடையாறில் உள்ள எனது வீட்டின் (A7, 4வது தெரு, நேரு நகர், அடையாறு, சென்னை) கதவைத் தட்டினர்.

நான் கதவைத் திறந்ததும், அவர்கள் என் பெயரைக் கேட்டார்கள். நான் அதை உறுதிப்படுத்திய உடனேயே, சமூக ஊடகப் பதிவு தொடர்பான விசாரணைக்காக என்னை பம்மலில் உள்ள T4 சங்கர் நகர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வந்திருப்பதாகக் கூறி, எனது கைபேசியைப் பறித்துக்கொண்டனர். அந்த விசாரணைக்கு அனுமதியளிக்கும் எந்தவொரு ஆவணத்தையோ, புகாரின் நகலையோ அல்லது முதல் தகவல் அறிக்கையையோ (FIR) அவர்கள் காட்டவில்லை.

பல்லாவரம் த.வெ.க (TVK) சட்டமன்ற உறுப்பினர் ஜே. காமாட்சிக்கு எதிராக, எனக்குத் தொடர்பே இல்லாத ஓர் இன்ஸ்டாகிராம் பக்கத்திலிருந்து அவதூறான கருத்து பதிவிடப்பட்டதாக அவர்கள் குற்றம்சாட்டினர். எனக்கு அந்த சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது அவருடைய சமூக ஊடகப் பக்கங்களையோ தெரியாது; உண்மையில், அவரைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை. எனக்கு ஓர் இன்ஸ்டாகிராம் கணக்குக்கூட கிடையாது என்பதை அவர்களுக்கு விளக்க முயன்றேன். இருப்பினும், என் பேச்சைக் கேட்காமல், எனது வீட்டின் வெளியே நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஒரு வாடகை காரில் (காவல்துறை வாகனம் அல்ல) என்னை ஏற்றிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர்.

எனது குடும்பத்தினரிடம் தெரிவிப்பதற்கான வாய்ப்பைக் கூட அவர்கள் எனக்கு வழங்கவில்லை. வாகனம் கிண்டியைத் தாண்டியபோது, எனது குடும்பத்தினரைத் தொடர்பு கொள்வதற்காக எனது கைபேசியைத் திருப்பித் தருமாறு கேட்டேன். பலமுறை கோரிக்கை விடுத்த பிறகு, சில நிமிடங்கள் மட்டும் கைபேசியைப் பயன்படுத்த என்னை அனுமதித்தனர்; அப்போது என்ன நடக்கிறது என்பதை எனது நண்பர்களிடம் தெரிவித்தேன்.

அதற்குள், அந்த வாகனம் பல்லாவரத்தை அடைந்துவிட்டது; அங்கு சாலையோரமாகச் சுமார் 45 நிமிடங்கள் வாகனத்தை நிறுத்திவைத்திருந்தனர். அவர்கள் பல தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டனர்; பல அழைப்புகளையும் பெற்றனர். அதைத் தொடர்ந்து, என்னை மீண்டும் வீட்டிற்கே கொண்டுசென்று விடுமாறு தங்களுக்கு உத்தரவு வந்துள்ளதாக என்னிடம் தெரிவித்தனர்.

திரும்பும் வழியில், ஓர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் இருந்து பதிவிடப்பட்ட அவதூறான கருத்தின் ஸ்கிரீன்ஷாட்டை எனக்குக் காட்டினர். அந்தக் கணக்கின் சுயவிவரப் படமாக (Profile picture) எனது புகைப்படம் இருந்தது; ஆனால் அதன் பயனர் பெயர் வேறொன்றாக (@youvijayamani) இருந்தது. அதைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் ஆராய்ச்சிப் பணியாளராக (Research affiliate) இருந்த ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் இருந்து அந்தக் குற்றவாளி எனது புகைப்படத்தை எடுத்திருக்கக்கூடும் எனத் தெரிகிறது.

எனது குடியிருப்பிற்கு வந்தடைந்ததும், அந்த இன்ஸ்டாகிராம் கணக்குடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று எழுத்துப்பூர்வமாகத் தருமாறு என்னிடம் கேட்டனர். அந்தக் கணக்கு என்னுடையது அல்ல என்றும், எனது புகைப்படத்தைக் கொண்டு இயங்கும் அத்தகைய இன்ஸ்டாகிராம் ஐ.டி. குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் காவல் ஆய்வாளருக்கு (T4 சங்கர் நகர்) முகவரியிட்டு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தேன்.

அந்தக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு, அவர்கள் எனது கைபேசியைத் திருப்பிக் கொடுத்தனர். காலை சுமார் 7:45 மணியளவில் நான் மீண்டும் வீட்டில் கொண்டுவந்து விடப்பட்டேன்.

என்னை நானே நியாயப்படுத்திக்கொள்வதற்கு ஒரு நியாயமான வாய்ப்பைக் கூடத் தராமல் அவர்கள் என்னை நடத்திய விதம், என்னை ஆழ்ந்த மன உளைச்சலுக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கியுள்ளது. மேலும், எனக்குத் தெரியாத ஒரு நபருக்கு எதிராக அவதூறான கருத்துகளைப் பதிவிடுவதற்காக யாரோ ஒருவர் எனது புகைப்படத்தைத் தவறாகப் பயன்படுத்திப் போலி இன்ஸ்டாகிராம் கணக்கை உருவாக்கியுள்ள நிலையில், இந்த விவகாரத்தில் நான்தான் பாதிக்கப்பட்டவன். இருப்பினும், அதிகாலை வேளையில் காவலர்கள் எனது வீட்டு வாசலுக்கு வந்து, இரவு உடையில் இருந்த என்னை அழைத்துச் சென்றதன் மூலம் ஒரு குற்றவாளியைப் போல நடத்தப்பட்டேன்.

இந்த ஒட்டுமொத்த நிகழ்வும் வெறும் ஓர் இன்ஸ்டாகிராம் கணக்கு அல்லது ஒரு போலி ஐ.டி. உருவாக்கப்பட்டது சார்ந்தது மட்டுமே அல்ல; மக்களை அச்சுறுத்துவதற்கும் அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதற்குமாகப் புனையப்பட்ட ஒரு கணக்காகவும் இது இருக்கலாம் என்று நான் அஞ்சுகிறேன்.

தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சியைக் கூர்ந்து கவனிப்பவன் என்ற வகையில், நான் மிகுந்த கவலையடைந்துள்ளேன். இந்தச் சட்டவிரோதக் காவலுக்கும், போலி ஐ.டி. உருவாக்கியதற்கும், இழிவான கருத்துகளைப் பதிவிட்டு பொதுவெளியில் எனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியதற்கும் காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இதுதான் கலையரசனின் புகார் மனு

அப்பட்டமான சட்ட மீறல்கள்:

இந்தப் புகாரில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளின் அடிப்படையில், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவுகளின்படி (CrPC / BNSS) காவல்துறை தரப்பில் கீழ்க்கண்ட முக்கிய சட்ட மீறல்கள் நடைபெற்றுள்ளது தெளிவாகிறது:



மனுஷ்ய புத்திரன்

மாநில ஆலோசகர்,
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

● 'டி.கே. பாசு' (D.K. Basu) வழக்கு வழிகாட்டுதல்கள் மீறல்: உச்ச நீதிமன்றம் கைது மற்றும் விசாரணை நடைமுறைகள் குறித்து பிறப்பித்த உத்தரவுகள் அனைத்தும் மீறப்பட்டுள்ளன.

O விசாரிக்க வரும் காவலர்கள் முறையான சீருடை மற்றும் பெயர் விவர அட்டை (Name tag) அணிந்திருக்க வேண்டும். ஆனால், இங்கு சீருடை அணியாமல் சிவில் உடையில் வந்துள்ளனர்.

O ஒருவரை விசாரணைக்கோ அல்லது காவலுக்கோ அழைத்துச் செல்லும்போது முறையான ஆவணம் (Memo) தயாரிக்கப்பட்டு, அதில் நேரம், இடம் குறிப்பிடப்பட்டு குடும்பத்தினரின் கையொப்பம் பெறப்பட வேண்டும். இங்கு எவ்வித ஆவணமும் வழங்கப்படவில்லை.

O காவலில் எடுக்கப்படும் நபர் தனது குடும்பத்தினருக்கோ அல்லது வழக்கறிஞருக்கோ உடனடியாகத் தகவல் தெரிவிக்க உரிமை உண்டு. ஆனால், இவரது கைபேசி பறிக்கப்பட்டு, குடும்பத்தினருக்குத் தெரிவிக்க வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

● **முறையான அழைப்பாணை இன்மை:** 7 ஆண்டுகளுக்குக் குறைவான தண்டனைக்குரிய குற்றச்சாட்டுகளுக்கு (குறிப்பாகச் சமூக வலைதளக் கருத்துகள், அவதூறு வழக்குகள்) ஒருவரைக் கைது செய்யவேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாக விசாரணைக்கு ஆஜராகக்கோரி முறையான அழைப்பாணை (Notice under Section 41A CrPC / Sec 35 BNSS) வழங்கப்பட வேண்டும். எந்தவித முன் அறிவிப்போ, எழுத்துப்பூர்வ சம்மனோ இன்றி அதிகாலை 5 மணிக்கே வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றது முற்றிலும் சட்டவிரோதமானது.

● **அர்னேஷ் குமார் (Arnesh Kumar) வழக்கு வழிகாட்டுதல்கள் மீறல்:** உரிய ஆதாரங்கள் மற்றும் வலுவான காரணங்கள் இல்லாமல் இயந்திரத்தனமாகக் கைது செய்யவோ அல்லது காவலில் வைக்கவோ கூடாது என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக இது அமைந்துள்ளது. புகாரின் உண்மைத்தன்மையையோ அல்லது கணக்கின் உரிமையாளரையோ உறுதிசெய்யாமல் நேரடியாகக் காவலில் எடுக்க முயன்றுள்ளனர்.

● **அடிப்படை உரிமைகள் மறுப்பு:** ஒருவரை எந்தக் குற்றச்சாட்டின்கீழ் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள் என்பதற்கான முதல் தகவல் அறிக்கை (FIR) நகலோ அல்லது பெறப்பட்ட புகாரின் நகலோ அவரிடம் காண்பிக்கப்படவில்லை. இது ஒரு குடிமகனின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது.

● **தனியார் வாகனப் பயன்பாடு:** அரசுப் பணி நிமித்தமாகவோ அல்லது விசாரணைக்காகவோ ஒருவரை அழைத்துச் செல்லும்போது அரசுக்குச் சொந்தமான காவல் வாகனங்களைப் பயன்படுத்துவதே வழக்கம். ஆனால், தனியார் வாடகைக் காரைப் (Rented car) பயன்படுத்தியிருப்பது சந்தேகத்திற்குரிய மற்றும் விதிமீறலான நடைமுறையாகும்.

● **சட்டவிரோத அடைத்து வைத்தல் (Wrongful Confinement):** முறையான கைது நடைமுறைகள் ஏதுமின்றி, ஒருவரின் நடமாட்ட சுதந்திரத்தைப் பறித்து, காரிலேயே 45 நிமிடங்களுக்கும் மேலாகச் சாலையோரம் நிறுத்திவைத்திருந்தது இந்தியத் தண்டனைச் சட்டப்படி "சட்டவிரோதமாக அடைத்து வைத்தல்" என்ற குற்றத்தின்கீழ் வரக்கூடியது.

● **பறிமுதல் மகஜர் இன்மை:** டிஜிட்டல் சாதனங்கள் அல்லது கைபேசிகளை விசாரணைக்காகப் பறிமுதல் செய்யும்போது, அதற்கான முறையான "பறிமுதல் மகஜர்" (Seizure Mahazar) தயார் செய்யப்பட்டு அவரிடம் கையொப்பம் பெறப்பட வேண்டும். எவ்விதப் பதிவும் இன்றி கைபேசியைப் பறித்துக் கொண்டது சட்டமீறலாகும்.

போலி கணக்குகளும் காவல்துறை அராஜகமும்:

ஒரு போலி கணக்கை வைத்து ஒருவரைக் காவல்துறை விசாரணை என்ற பெயரில் துன்புறுத்த முடியும் என்பது மிக ஆபத்தான போக்காகும்.

இணையத்தில் ஒரு புகாரில் ஒருவரின் புகைப்படம் அல்லது பெயர் இடம்பெற்றிருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக, அந்த நபரே குற்றவாளி என்ற முடிவுக்குக் காவல்துறை வந்துவிட முடியாது. தகவல் அறியும் நோக்கில் அல்லது உண்மை நிலையைக் கண்டறிய CrPC பிரிவு 41A (அல்லது BNSS பிரிவு 35) கீழ் எழுத்துப்பூர்வ சம்மன் அனுப்பி, விளக்கம் கேட்க மட்டுமே காவல்துறைக்கு அதிகாரம் உண்டு. போலி கணக்கில் உள்ள படத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே ஒருவரைக் குற்றவாளியாகக் கருதி, அதிகாலை வேளையில் பிடித்துச் செல்வதோ அல்லது காவலில் வைப்பதோ சட்டப்படி முற்றிலும் தவறானது.

சமூக ஊடகங்களில் முகப்புப் படத்தை (Profile Picture) யார் வேண்டுமானாலும் பதிவிறக்கம் செய்து மற்றொரு பெயரில் கணக்கு தொடங்க முடியும். எனவே, வெறும் 'ஸ்கிரீன்ஷாட்' என்பது முதற்கட்டத் தகவல் (Lead) மட்டுமே தவிர, சட்டத்தின் முன் அது குற்றத்தை நிரூபிக்கும் உறுதியான முதன்மை ஆதாரம் (Substantive Evidence) அல்ல.

அந்தக் கணக்கு குறிப்பிட்ட நபருக்குத்தான் சொந்தமானது என்பதை நிரூபிக்கக் காவல்துறை பின்வரும் தொழில்நுட்பத் தரவுகளைச் சேகரிக்க வேண்டும்:

1. மெட்டா (Meta/Instagram) நிறுவனத்திடமிருந்து அந்த குறிப்பிட்ட கணக்கைத் தொடங்கப் பயன்படுத்திய ஐ.பி. (IP) முகவரி, பதிவு செய்யப்பட்ட தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றைப் பெற வேண்டும்.

2. பதிவிடப்பட்ட நேரத்தில் பயன்படுத்தப்பட்ட சாதனம் யாருடையது என்பதைக் கண்டறிய வேண்டும்.

3. இந்தியச் சாட்சியச் சட்டத்தின் கீழ், எந்தவொரு மின்னணு ஆதாரத்தையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முறையான 65B சான்றிதழ் (தற்போது பாரதிய சாட்சிய அதிநியம் BSA கீழ் தொடர்புடைய பிரிவு) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தொழில்நுட்ப ரீதியாக ஐ.பி. முகவரி அல்லது சாதனத் தொடர்பு அந்த நபருடன் இணையாத வரை, ஒரு போலி கணக்கையோ அல்லது அதன் ஸ்க்ரீன்ஷாட்டையோ வைத்து ஒருவரைக் குற்றவாளியாகச் சட்டத்தின் முன் நிறுத்த முடியாது. இந்த நடைமுறைகளைத் தவிர்த்து நேரடியாக நடவடிக்கை எடுப்பது சட்டவிரோதமாகும்.

'சில்லிங் எஃபெக்ட்' (Chilling Effect) என்னும் அச்சுறுத்தல் உத்தி:

எதிர்க்கட்சியினர் மற்றும் விமர்சகர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதும், ஆளுங்கட்சியினர் மீதான புகார்களில் தாமதம் அல்லது பாராமுகம் காட்டுவதும், அதிகாலை மற்றும் இரவோடு இரவாகக் கைதுகள் செய்து தூரத்து ஊர்களுக்கு அழைத்துச் சென்று மன உளைச்சலை ஏற்படுத்துவதும், கடுமையான சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்துவதும் த.வெ.க. அரசின் வழிமுறையாக மாறியுள்ளது. ஒன்றியத்தில் இருக்கும் பா.ஜ.க. அரசுக்கும், தமிழகத்தில் இருக்கும் த.வெ.க. அரசுக்கும் இதில் நோக்கங்களும் வழிமுறைகளும் ஒன்றே!

எதிர்க்கட்சியினர், விமர்சகர்கள் அல்லது பொதுக் குடிமக்கள் மீது அரசு இயந்திரமும் காவல் துறையும் சட்ட நெறிமுறைகளைத் தாண்டித் தன்னிச்சையான நடவடிக்கைகளை மேற்கொள்வது, ஜனநாயக அமைப்பின் சமநிலையை நேரடியாகக் குலைக்கக்கூடியது. இது திட்டமிட்ட அச்ச உணர்வை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டிருப்பதுடன், ஆழமான அரசியல், சமூக மற்றும் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. சட்டத் துறையிலும் அரசியலறிவியலிலும் இதனை "சில்லிங் எஃபெக்ட்" (Chilling Effect அச்ச மூட்டி உறையவைக்கும் உத்தி) என்பார்கள்.

● **சுயத் தணிக்கை உணர்வு:** ஒரு குறிப்பிட்ட நபர் மீது நடத்தப்படும் அதிகாலை விசாரணை, பொது வெளியில்கைதுஅல்லதுசட்டவிரோதக் காவல் என்பது அந்தத் தனி நபரை மட்டும் குறிவைப்பது அல்ல. அவரைப் போன்ற பிற விமர்சகர்கள், பொதுக் குடிமக்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு "எதிர்த்துப் பேசினால் உங்களுக்கும் இதுதான் கதி" என்ற மறைமுக எச்சரிக்கையை அனுப்புவதே இதன் முக்கிய உத்தியாகப் பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பொதுமக்கள் அரசின் குறைகளைச் சுட்டிக்காட்டத் தயங்கி, தங்களைத் தாங்களே தணிக்கை (SelfCensorship) செய்துகொள்ளும் சூழல் உருவாகிறது.

● **அதிகாரக் குவிப்பும் அரசியல் வன்மமும்:** ஆரோக்கியமான ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளின் பணி ஆளுங்கட்சியைத் தவறுகளில் இருந்து தடுத்து நிறுத்துவது. எதிர்க்கட்சிகள் மீதான இத்தகைய அழுத்தங்கள், சட்டமன்றத்திற்கு வெளியிலான அரசியல் விவாதங்களை முடக்கி, ஒருதலைப்பட்சமான அதிகாரக் குவிப்பிற்கு வழிவகுக்கும். அரசு நிர்வாகம் நடுநிலையானதாகப் பார்க்கப்படாமல், பழிவாங்கும் கருவியாகப் பார்க்கப்படும்போது, கட்சித் தொண்டர்களிடையே வெறுப்புணர்வும் அரசியல் வன்மமும் தீவிரமடையும்.

● **முடிவில்லா நச்சுச் சுழற்சி (Vicious Cycle): இன்று ஆளும் தரப்பு கையாளும் தன்னிச்சையான முறைகள் ஒரு தவறான முன்னுதாரணமாகி, நாளை ஆட்சி மாற்றம் ஏற்படும்போது அடுத்த அரசும் அதே பழிவாங்கும் உத்திகளை முந்தைய ஆளுங்கட்சியினர் மீது பிரயோகிக்கும் முடிவில்லா நச்சுச் சுழற்சியை உருவாக்கும்.**

● **மக்களின் அதிருப்தியும் காவல்துறை மீதான நம்பிக்கை இழப்பும்: குறுகிய கால நோக்கில் விமர்சனங்களை அடக்கினாலும், நீண்டகால நோக்கில் அரசின் மீது மக்களுக்கு அதிருப்தியும், பழிவாங்கும் அரசு என்ற பிம்பமும் வலுத்துத் தேர்தல் களத்தில் பின்னடைவை ஏற்படுத்தும். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய காவல்துறை, அரசியல் வாதிகளின் தனிப்பட்ட ஏவலர்களாகச் செயல்படுகிறார்கள் என்ற எண்ணம் சமூகத்தில் பரவும் போது, எளிய மக்களுக்குக் காவல்துறையின் மீதுள்ள பாதுகாப்பு உணர்வும் மரியாதையும் போய்விடும்.**

● **சமூக மற்றும் உளவியல் பாதிப்புகள்: சமூகப் பிரச்சினைகள், ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து வெளிப்படையாகப் பேசும் சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் அச்சத்தின் காரணமாக அமைதியாகி விடுவர். போலி கணக்குகளைத் தொடங்கியாரையும் எளிதில் வழக்குகளில் சிக்கவைக்க முடியும் என்ற தவறான முன்னுதாரணம் சமூகத்திற்குள் பரவி, இணையவெளி தனிநபர் விரோதங்களை முடித்துக்கொள்ளும் ஆபத்தான களமாக மாறும்.**

● **தனிநபர் மற்றும் குடும்பத்தின் மீதான வன்முறை:** அதிகாலை வேளையில் தூக்கத்தில் இருந்து இழுத்துச் செல்லப்படுவது, குடும்பத் தினர் முன் குற்றவாளியாகக் காட்சிப்படுத்தப்படுவது ஆகியவை ஒரு மனிதனுக்குக் கடுமையான மன உளைச்சலையும், தன்மானச் சிதைவையும் (Humiliation) ஏற்படுத்தும். தமக்குத் தொடர்பே இல்லாத குற்றத்திற்காகக் காவல்துறையால் இழுத்தடிக்கப்படுவது ஆழ்ந்த பாதுகாப்பற்ற உணர்வை உண்டாக்கும். சம்பந்தப்பட்ட நபரை விட அவரது குடும்பத்தினர், வயதான பெற்றோர், குழந்தைகள் ஆகியோர் தொடர் பதற்றத்திலும் அச்சத்திலும் வாழும் நிலைக்குத் தள்ளப்படுவர். இது குடும்பத்திற்குள் அவரை அரசியலில் இருந்தோ அல்லது சமூகக் கருத்து சொல்வதிலிருந்தோ விலகச் சொல்லும் அழுத்தத்தை உருவாக்கும்.

● **அச்ச மனநிலை (Paranoia):** சமூக வலைதளப் பயனர்கள் மற்றும் பொதுமக்கள் தாங்கள் சாதாரணமாகப் பதிவிடும் அரசியல் கருத்துகளுக்குக் கூடக் கைது செய்யப்படலாம் என்ற "அச்ச மனநிலைக்கு" ஆளாகி, பொது விவாதங்களிலிருந்து முழுமையாக ஒதுங்குவர்.

அதிகாரத்தைப் பயன்படுத்தி விமர்சனங்களை அச்சுறுத்தலின் மூலம் தற்காலிகமாக ஒடுக்க முடிந்தாலும், அது நிறுவனங்களின் நம்பகத்தன்மையையும் ஜனநாயகத்தின் அடிப்படைத் தூண்களையும் உள்நோக்கி அரித்துச் சிதைத்துவிடும் என்பதே வரலாற்றின் பாடமாகும்.

வலதுசாரி பா.ஜ.க. அரசுக்கு எதிராகப் பேசினார்கள் என்பதற்காக எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், சமூக செயல் பாட்டாளர்கள் என ஸ்டான் சுவாமி, பேராசிரியர் ஆனந்த் டெல்டும்டே, புகழ்பெற்ற மனித உரிமை வழக்கறிஞர் சுதா பரத்வாஜ், பேராசிரியர் சோமா சென், வெர்னான் கோன்சால்வ்ஸ், அருண் ஃபெரீரா, கௌதம் நவ்லகா, உமர் காலித், ஷர்ஜீல் இமாம், மீரான் ஹைதர், கலீத் சைஃபி, அதீக் உர்ரஹ்மான், சித்திக் கப்பான், ஃபஹத் ஷா, சஜித் குல் மற்றும் பிரபீர் புர்கயஸ்தா எனப் பலரும் கொடூரமான UAPA சட்டத்தின் பிரிவு 43D(5) மூலம் பிணையில்லாமல் நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்திருக்கின்றனர்.

த.வெ.க. அரசு இப்போது இந்த வழியில்தான் சென்றுகொண்டிருக்கிறது.